## சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் - கல்வி - பள்ளிகள் - 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 95 மற்றும் அதற்கு மேல் தேர்ச்சி விழுக்காடு காட்டிய தலைமை ஆசிரியர்கள் மற்றும் பாடம் வாரியாக 100 % தேர்ச்சி விழுக்காடு காட்டிய முதுகலை / பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந-7) துறை

அரசாணை (டி) எண். 111

நாள்: 04.06.2024
குரோதி வருடம்,
வைகாசி மாதம் 22 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2055,

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.121, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (ஆதிந7) துறை, நாள்.28.11.2011.
2. பழங்குடியினர் நல இயக்குநரின் கடித ந.க.எண். பமே../ஐ2/4232/2021, நாள் - 9.2.2024.

**ஆணை:-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் 2011-2012 ஆம் கல்வி ஆண்டு முதல் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொது தேர்வுகளில் 95 விழுக்காடு காட்டும் தலைமை ஆசிரியர்களுக்கு ரூ.10,000/- மற்றும் பாடம் வாரியாக 100% விழுக்காடு தேர்ச்சி வழங்கும் முதுகலை/ பட்டதாரி பாட ஆசிரியர்களுக்கு ரூ.5,000/-ம் ஊக்கத் தொகையாக வழங்கிட அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களின் கடிதத்தில், மாவட்ட பழங்குடியினர் நல திட்ட அலுவலர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட பொதுத் தேர்வு தேர்ச்சி விவர அறிக்கைகளின் அடிப்படையில் 10 மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 95 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் தேர்ச்சி கொடுத்த தலைமை ஆசிரியர்கள் மற்றும் பாடம் வாரியாக 100% தேர்ச்சி விழுக்காடு காட்டிய முதுகலை / பட்டதாரி ஆசிரியர்களை ஊக்கப்படுத்தும் விதமாக, 2021-2022 மற்றும் 2022-2023 ஆம் கல்வி ஆண்டிற்கான தேர்ச்சி குறித்த விவரங்களை தொகுத்து நிதியினை வழங்கிடுவதற்கு ஏதுவாக

த.பி.பா..

Padasalai.Net

அரசுக்கு கருத்துரு அனுப்பி வைத்துள்ளார். மேலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஒருங்கிணைந்து செயல்பட்டு வந்த 2016-2017 வரை, அதிக தேர்ச்சி விழுக்காடு காட்டிய ஆசிரியர்களுக்கு 2225 01 277 AG 5904 என்ற கணக்குத் தலைப்பின் கீழ் ஊக்கத் தொகை பெற்று வழங்கப்பட்டுள்ளது என்றும், அதனைத் தொடர்ந்து பழங்குடியினர் நலத்துறை தனியாக செயல்படும் நேர்வில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில், அதிக தேர்ச்சி விழுக்காடு காட்டிய மேல்நிலை / உயர்நிலை பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் பாடம் வாரியாக முதுகலை / பட்டதாரி ஆசிரியர்களுக்கு 2021-2022 மற்றும் 2022-2023 ஆம் கல்வி ஆண்டுகளில் நிலுவையாக உள்ள ஊக்கத் தொகையான ரூ.30,05,000/- (ரூபாய் முப்பது இலட்சத்து ஐந்தாயிரம் மட்டும்) யினை சம்மந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு பெற்று வழங்கிடுவதற்கு ஏதுவாக புதிய கணக்கு தலைப்பு வழங்கி, நிதி ஒதுக்கீடு செய்யுமாறு பழங்குடியினர் நல இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

| வகுப்பு | 95 % மற்றும் அதற்கு மேல் தேர்ச்சி கொடுத்த தலைமை ஆசிரியர் | | | 100 % தேர்ச்சி கொடுத்த முதுகலை பட்டதாரி ஆசிரியர் | | | நிதி ஒதுக்கீடு கோரும் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | ஊக்கத் தொகை விதம் | வழங்க வேண்டிய தொகை | எண்ணிக்கை | ஊக்கத் தொகை விதம் | வழங்க வேண்டிய தொகை | |
| 12 | 22 | 10,000 | 2,20,000 | 248 | 5,000 | 12,40,000 | 14,60,000 |
| 10 | 31 | 10,000 | 3,10,000 | 247 | 5,000 | 12,35,000 | 15,45,000 |
| மொத்தம் | 53 | 10,000 | 5,30,000 | 495 | 5,000 | 24,75,000 | 30,05,000 |

3. பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை, அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அதனடிப்படையில் பழங்குடியினர் நலத்துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வுகளில் 95% தேர்ச்சி வழங்கும் தலைமை ஆசிரியர்களுக்கு ரூ.10,000/- மற்றும் பாடம் வாரியாக 100% தேர்ச்சி வழங்கும் முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு ரூ.5,000/-ம் ஊக்கத்தொகையாக வழங்கிடவும், 2021-2022 மற்றும் 2022-2023 ஆம் கல்வி ஆண்டுகளில் வழங்கப்படாமல் நிலுவையாக உள்ள ரூ.30,05,000/-(ரூபாய் முப்பது இலட்சத்து ஐந்தாயிரம் மட்டும்) கூடுதல் நிதியாக ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது.

த.பி.மா.

Padasalai.Net

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 02 பழங்குடியினர் நலன் - 277 கல்வி மாநில செலவினங்கள் BS. பழங்குடியினர் நலப் பள்ளிகளுக்குப் பரிசுகள் வழங்குதல் - 359 பரிசுகளும் வெகுமதிகளும் - 01 பரிசுகளும் வெகுமதிகளும்.

(IFHRMS DPC : 2225-02-277-BS-35901)

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.30,05,000/-ஐ 2024-2025-ஆம் நிதியாண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினம் 2024-2025-ஆம் நிதியாண்டிற்கான துணை மானியக்கோரிக்கையில் ஒரு சிறப்பு நிகழ்வாக கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2024-2025-ஆம் நிதியாண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக்குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித் (ஆதிம/பந/ வ.செ.பொ-I)துறைக்கு அனுப்பி வைக்குமாறு பழங்குடியினர் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 3-ல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை அவர்கள் மூலம் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு வழங்கிட அனுமதி அளிக்கப்படுகிறது.

7. இவ்வாணை அ.சா.கு.எண்.e349/ஆதிம/பந/2024, நாள்:01.06.2024-ல் நிதித்துறையின் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்க பெயரேட்டு எண். 0223 (இருநூற்று இருபத்து மூன்று) (IFHRMS ASL No. 2024060223)

(ஆளுநரின் ஆணைப்படி)

க.லட்சுமி பிரியா,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005,
அனைத்து மாவட்ட ஆட்சியர்,

த.பி.பா..

Padasalai.Net

அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / திட்ட அலுவலர்.

சம்பளக் கணக்கு அலுவலர் (கி), சென்னை-600 008.

முதன்மை மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை -600 018.

நகல்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை - 600 009.

நிதி (ஆதி(ம) பந- வ.செ.பொ-I/2/வ.வ. I)துறை, சென்னை-600 009.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

அரசு செயலாளரின் தனிச் செயலர், சென்னை - 600 009.

இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

நா. செல்வராணி
05/06/202

பிரிவு அலுவலர்.

5/6/24

1/b

Padasalai.Net